# புதிய வாழ்க்கை



# புதிய ஜீவன்

எல். ஜெட்டர் வாக்கர்

INTERNATIONAL CORRESPONDENCE INSTITUTE
P. O. BOX 5036, BANGALORE-560 001.

CL1110-TL

# பொருளடக்கம்


பாடம் பக்கம்

முதலாவதாக நாம் சற்று உரையாடுவோம்

1. புது வாழ்வை ஆரம்பிக்கவும் ... 8

2. நடக்க கற்றுக் கொள்ளுதல் ... 19

3. நமது பரலோகத்தந்தையின் சத்தத்தை கவனியுங்கள் 32

4. நீவளர விரும்புகின்றாயா ? ... 45

5. புதிய ஜீவியம்-புதிய நடவடிக்கை ... 57

6. உங்களது புதிய நியமம் ... 75

7. நமக்கு துணை செய்பவர் ஒருவர் உண்டு ... 82

8. உங்கள் ஜீவியம் ஓர் விளக்காய் இருக்கிறது ... 94

9. சந்தோஷமுள்ள ஒரு குடும்பத்தை பெற்றிருப்பது எங்ஙனம் ? ...110

10. உங்கள் புதிய சுதந்திரம் (விடுதலை) ...122

இறுதி வினாத்தாள்



Edition 1987 Copies 2,500


---


© 1985 All Right Reserved



International Correspondence Institute
P. O. Box 5036 Bangalore, India
D/1984/2145/21.

Printed at : TECHNO PRINTERS B'lore-560 045.

# முதலாவதாக நாம் சற்று உரையாடுவோம்



இச்சிறுப் புத்தகத்தை படிப்பதற்கு முன் இப்புத்தகத்தைக் குறித்து சற்று உரையாடுவோம். இப்புத்தகம் நீங்கள் எல்லா நேரங்களிலும் படித்து பயன் பெறும்வகையில் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் உங்களுக்குபோதிக்கும் வகையிலும் உங்களுடைய ஒரு சில கேள்விகளுக்கு பதில் அளிக்க கூடியவகையிலும் எழுதப்பட்டுள்ளது. இதுப்படிப்படியாய் நீங்கள் அறிந்துக் கொள்ளக் கூடிய வகையில் எழுதப்பட்ட ஒரு விசேஷ புத்தகமாகும்.

இப்புத்தகம் ஒரு கையடக்கமான சிறுபுத்தகம். இதை நீங்கள் கையில் எடுத்து சென்று உங்களுக்கு கிடைக்கும் நேரங்களில் படிக்கக்கூடியவகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்திலுள்ள முழு பாடத்தையும் ஒரே நேரத்தில் படிக்க நேரம் கிடைக்காத நிலைமையிலும், உங்களுக்கு கிடைக்கின்ற நேரங்களில் உங்கள் வசதியின்படி படிக்கலாம். இப்புத்தகத்தைப் படித்து உங்களால் என்னச்செய்ய இயலுமோ, எப்பொழுது செய்ய இயலுமோ எவற்றைச் செய்ய இயலுமோ அவற்றை அவ்வப்போது செய்து முடியுங்கள்.

இப்புத்தகம் ஒரு பயிற்சி புத்தகம் போல் உருவாக்கப்பட்டுள்ளது. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின்படி "நீங்கள் செய்ய வேண்டியது" என்னும் பகுதி ஒவ்வொரு பாடத்திற்கும் கொடுக்கபட்டுள்ளது. பாடங்களை கவனமாய் படித்து நீங்கள் செய்ய வேண்டியனவற்றை கவனமாய் செய்ய வேண்டும்,

## நீங்கள் செய்ய வேண்டியது

கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளின் சரியான பதிலை மாதிரியின்படி 'X' குறியிட்டு காட்டுக

1. இது எவ்வகையான புத்தகம் ?

X a) சிறப்பான புத்தகம்

....b) சாதாரண புத்தகம்

2. இப்புத்தகம் உங்களுக்கு

...a) வகுப்பு அறையில் போதிக்க பயன்படுவது

X b) எல்லா நேரங்களிலும் படித்து பயன்பெறச் செய்வது.

இப்பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான பதில்கள் நீங்கள் 'X' குறியிட்டது சரியா தவறு என உங்களுக்கு போதிக்கிறது. மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு குறிக்க வேண்டிய பதில்கள் 1a) சிறப்பான புத்தகம் 2b) எல்லா நேரங்களிலும் படித்து பயன்பெறச் செய்வது.

கேள்விகள் பதில்கள் குறித்து ஒரு சில குறிப்புகள்

* பதில்களை தெரிந்தெடுக்கும் போது உங்கள் கவனத்தை சிதறவிடக் கூடாது.
* இப்பகுதியின் மூலம் உங்கள் புரிந்துக் கொள்ளும் தன்மையை சோதித்தறிக.
* ஒவ்வொருப்பாடத்தையும் படிக்கும்பொழுது அப்பாடத்தின் முக்கிய கருத்தை மனதில் கொள்ளுக.

ஒவ்வொருப் பாடத்திலும் உள்ள 'நீங்கள் செய்ய வேண்டிய பகுதிகள்' அடியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதில்களும் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் பதில்களை தேர்ந்தெடுப்பதற்கு முன் கீழேக் கொடுக்கப்பட்டுள்ள பதில்களை பார்க்காமல் இருப்பதற்கு ஒரு சிறு காகித துண்டை வைத்து அதை மறைத்துக்கொள்வது நல்லது. நீங்கள் உங்கள் பதில்களை குறிப்பிட்ட பின் கொடுக்கப்பட்டுள்ள சரியான பதில்களை பார்த்து சரிசெய்துக் கொள்க.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் 'X' என்னும் குறியிடவும்.

3. இக்கேள்விகளும் பதில்களும்

....a) உங்கள் புரிந்து கொள்ளும் தன்மையை சோதித்தறியும்

....b) நீங்கள் படித்த பாடத்தைப்பற்றிய பொது அறிவை சோதிக்கிறது.

பதில் : 3a) உங்கள் புரிந்து கொள்ளும் தன்மையை சோதித்தறியும்

இப்புத்தகத்தின் சில இடங்களில் "நீங்கள் செய்ய வேண்டியது" என்னும் பகுதிக்கு கீழே வேறு சில பயிற்சிகளும் செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இப்பயிற்சிகள் பாடங்களை தெளிவாய் புரிந்துக் கொள்ள உங்களுக்கு உதவி செய்வதாய் உள்ளது. ஆகவே அவைகளையும் செய்ய மறந்து போகக்கூடாது.

இப்புத்தகம் உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையில் எழுதப்பட்டது. இது மிகவும் உபயோகமும் ஆசீர்வதமாகவும் இருக்கும். ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு இது உபயோகமாக இருந்தது. இது உபயோகித்தால் மாத்திரம் இது உங்களுக்கு நன்மையாக இருக்கும். ஆகவே கற்றதை உங்கள் அனுபவத்தில் கொண்டுவர முயற்சியுங்கள்.

## உங்கள் விடைத்தாள்

இப்புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் விடைத்தாளை பூர்த்தி செய்து எங்கள் அலுவகத்திற்கு அனுப்பவும். அது திருப்திக்கரமாயிருப்பின் அடுத்த பாடங்களை அனுப்பி வைப்போம்.

---

## ஜெபம்

புது ஜீவன் என்ற பாடங்களுக்காக உமக்கு நன்றி. ஆண்டவரே, இதனை நல்முறையில் கற்றுக்கொள்ள உதவிச் செய்யும். இதன் மூலம் நான் நல்ல கிறிஸ்தவனாக உதவி செய்யும். இயேசுவின் நாமத்திலே, ஆமென்